**செய்தி வெளியீடு எண்: 416** **நாள்: 29.02.2024**

**செய்தி வெளியீடு**

# உயர்கல்வித் துறை சார்பில் ரூ.134.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்வி சார் கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.86.89 கோடி செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 134 கோடியே 15 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆய்வகக் கட்டடங்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான கட்டடங்கள், வகுப்பறைகள், பணிமனைகள், சிற்றுண்டிக் கட்டடம், கணினி அறிவியல் கட்டடம், கழிவறை தொகுதிகள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், 86 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கல்விசார் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

## உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தல்

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள்; வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு திருமகள் ஆலைக்கல்லூரியில் 5 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13 ஆய்வக கட்டடங்கள்;

ஈரோடு மாவட்டம், தாளவாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 12 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடம்; கரூர் மாவட்டம், குளித்தலை டாக்டர் கலைஞர் அரசு கலைக் கல்லூரியில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஆய்வகக் கட்டடங்கள்;

பெரம்பலூர் மாவட்டம், கீழக்கணவாய் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறைகள் 2 ஆய்வகங்கள் மற்றும் கூடுதல் பணிமனைக் கட்டடம்; சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் 25 கோடியே 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட சிற்றுண்டிக் கட்டடம்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம், அரசு கலைக் கல்லூரியில் 3 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள்; மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பொன்மனச் செம்மல் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள்;

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தலா 11 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கட்டடங்கள்;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தலா 12 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கட்டடங்கள்;

சேலம் மாவட்டம், மேட்டூர், வனவாசி கிராமம் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பணிமனைகள்; நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் 5 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் இரண்டு கழிவறைத் தொகுதிகள்;

நாமக்கல், அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 2 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் ஒரு கழிப்பறை தொகுதி; புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் ஆய்வகம், வகுப்பறை கட்டடம் மற்றும் கழிப்பறை தொகுதி; சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கணினி அறிவியல் கட்டடம்;

**என மொத்தம் 134 கோடியே 15 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**<u>உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்படவுள்ள புதிய கல்விசார் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுதல்</u>**

கடலூர் மாவட்டம், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம்;

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தாலுகா, ஜம்புகுளம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 11 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம்; அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பெரியவளையம் கிராமம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள தேர்வு கூடம்; சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள ஆறு வகுப்பறைகள், மூன்று ஆய்வகங்கள் மற்றும் மூன்று கழிவறைத் தொகுதிகள்;

மதுரை மாவட்டம், ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 12 வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்; தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 12 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை தொகுதிகள்;

தூத்துக்குடி, அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் 2 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகக் கட்டடம்; தென்காசி மாவட்டம், சுரண்டை காமராஜர் அரசு கலைக்கல்லூரியில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 14 வகுப்பறைகள்;

பெரம்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 14 வகுப்பறை கட்டடம்; வேலூர் மாவட்டம், குடியாத்தம் திருமகள் ஆலை அரசுக் கல்லூரியில் 5 கோடியே

40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 14 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள்;

**என மொத்தம் 86.89 கோடி செலவில் கட்டப்படவுள்ள கல்விசார் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப., தொழில் நுட்பக்கல்வி ஆணையர் திரு. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., கல்லூரி கல்வி இயக்குநர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் ஆர். வேல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டத்திலிருந்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ. கணேசமூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தா. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in